**O.S.No. 13/2021**

**Date : 13.07.2022**

***வா.சா.1 முத்துகுமாரசுவாமி***

***கு..வி***

எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் கூறினேன். எங்கள் ஊரில் ஆசிர்வாதம், ரத்தினம் என்ற பெயரில் நிறைய நபர்கள் உள்ளனர் என்றால் சரிதான். பிரதிவாதி 09.08.2019ல் என்னிடம் கடன் கேட்டார். மறுநாள் 10.08.2019ல் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். பிரதிவாதி என்னுடைய வீட்டில் வைத்து தான் தாவா புரோநோட்டில் கையொப்பம் மற்றும் கைரேகை வைத்து கொடுத்து என்னிடம் பணம் பெற்று சென்றார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-1ல் திருநெல்வேலி என்று எழுதி அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் திருநெல்வேலி என்ற எழுத்தும், மற்ற எழுத்துக்களும் வேறு நபரால் எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் பத்தாவது வரியில் என்ன வார்த்தை எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதை பிரதிவாதிதான் எழுதினார் என்பதால் அவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதியின் கைரேகைக்கு அருகே ' இடது கை பெருவிரல் ரேகை' என்ற வாசகத்தினை பிரதிவாதி தான் எழுதினார். வா.சா.ஆ.1ல் ' இடது கை பெருவிரல் ரேகை' என்ற வார்த்தையும் புரோ நோட்டில் உள்ள மற்ற எழுத்துக்களும் வேறுபாடாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் வரைவாளர் விவரம் குறிப்பிடவில்லை என்றால் புரோநோட்டை பார்த்து வேண்டுமென்றே திமிர்வாதமாக தெரியாது என சாட்சிமளிக்கிறார். வா.சா.ஆ.1ல் ரத்தினசாமி மகன் ஆசிர்வாதம் கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பில் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ரத்தினம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பில் பிரதிவாதியின் முகவரி 1/7 ஏ மெயின் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பிரதிவாதியின் முகவரி 1/9 நடுத்தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் முதலில் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ரத்தினம் என்று மட்டும் குறிப்பிட்டு பின்னர் ரத்தினசாமி என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஜெராக் புரோநோட்டில் ரூபாய் 2,00,000/- மற்றும் அதன் அருகே உள்ள கோடு வா.சா.ஆ.1ல் கண்டவாறு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதியின்

கையொப்பமும் ஜெராக்ஸ் புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கைரேகை மற்றும் கையொப்பம் ஒன்றாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 னை பிரதிவாதிதான் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்பதனை நிரூபிக்க கையெழுத்து பரிசோதனை மேற்கொள்ள தயாராக இருக்கிறேன். வா.சா.ஆ.1 னை கைப்பட பிரதிவாதி எழுதிகொடுத்தாக பிராதில் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் கண்ட சாட்சிகளை பிரதிவாதி தான் அழைத்துவந்தார். வா.சா.ஆ.1 ல் கண்ட சாட்சிகள் என்னுடைய வீட்டில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தார்கள், அப்பொழுது நானும் பிரதிவாதியும் சாட்சிகள் ராமசாமி, பரமசிவம் ஆகியோர்கள் இருந்தோம். நாங்கள் நாலு பேரும் கையொப்பம் செய்தோம்.வா.சா.ஆ.1 தவிர பிரதிவாதியிடம் வேறு எந்த புரோநோட்டும் வாங்கவில்லை. வா.சா.ஆ.1 பின்னிட்டு என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் முதலில் தென்காசி மாவட்டம் என்று குறிப்பிட்டு விட்டு பின்னர் மாவட்ட பிரிப்பு தேதி தெரிந்து திருநெல்வேலி என திருத்தம் மேற்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா,சா.ஆ.1 னை பிரதிவாதி எந்தக்காலத்திலும் நிரப்பி கொடுக்கவில்லை என்றாலும், அதில் கண்ட தேதி மற்றும் சங்கதியினை நான் பின்னிட்டு நிரப்பி உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நிரப்பப்படாத ஜெராக்ஸ் புரோநோட்டில் கையெழுத்து மற்றும் கைரேகையினை ஒப்புக்கொள்ளும்பட்சம் வழக்கு விரோதமாக அமையும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் படி பிரதிவாதி எந்த தொகையும் திருப்பி செலுத்த கடமை பட்டவர் கிடையாது என்றால் சரியல்ல எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி இல்லை